### கச்சத்தீவை நாங்கள் கொடுக்கவில்லை!

# கச்சத்தீவை மீட்க பேரவையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றினோம்!

## சட்டப்பேரவையில் கழகக் கொறடா எ.வ.வேலு விளக்கம்!

சென்னை, செப். 4-

கச்சத்தீவை நாங்கள் (தி.மு.க.) கொடுக்கவில்லை, அவர்கள் (காங்கிரஸ்) கொடுத்தது என்றும் கச்சத்தீவை மீட்க கலைஞர் பேரவையில் பல தீர்மானங்களை நிறைவேற்றினார் என்றும் சட்டபேரவையில் கழக கொறடா எ.வ.வேலு விளக்க மளித்து பேசினார்.

சட்டப்பேரவையில் கச்சத்தீவு பிரச்சினை பற்றி அமைச்சர் நிர்மல்குமார் பேசியதற்கு பதிலளித்து கழகக் கொறடா எ.வ.வேலு பேசியதாவது:



பேரவைத் தலைவர் அவர்களே கச்சத்தீவைப் பொறுத்தவரை இந்த மாமன்றத்தில் பலமுறை விவாதித்திருக்கிறோம். கச்சத்தீவை கொடுத்தது என்பது அப்போது காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவியாக இருந்த பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் கொடுக்கப்பட்டது.

அது கொடுத்தது தவறு - கலைஞர் முதலமைச்சராக இருக்கும் பொழுதே இதே மாமன்றத்தில் பலமுறை நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றி, மீட்டெடுக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம். ஆனால் கச்சத்தீவை நாங்கள் கொடுக்கவில்லை. அவர்கள்தான், கொடுத்து விட்டார்கள்.

இந்த விஷயத்தில் ஒன்றிய அரசை ஒட்டித்தான் மாநில அரசாங்கம் பல்வேறு கருத்துகளை பரிமாறிக் கொள்கிறோம். மீண்டும் நாம் கச்சத்தீவை அவர்களிடத்தில் கேட்டோம். ஆனால் இதுவரைக்கும் கிடைக்கவில்லை. அது தான் உண்மை!

இவ்வாறு கழகக் கொறடா எ.வ.வேலு பேசினார்.

---

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு

# மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, செப்.4-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சருமான, கழக கொறடாவுமான எ.வ. வேலு தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றுகிறார். தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதுகுறித்து மாவட்ட திமுக அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது

இன்று (04.09.2026 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

செயற்குழுக் கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ. கண்ணன் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன். எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா. ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில், ஆகஸ்ட் 22 அன்று கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோர் கருத்துக்கள் வழங்கி உரையாற்றுகின்றனர்.

செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

வேலூர் வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் வி.டி.சிவக்குமார், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"<br>சென்னை - 600 018.<br>நாள்: 03-09-2026.

**துரைமுருகன்**<br>பொதுச்செயலாளர்,<br>தி.மு.க.

---

### தூத்துக்குடியில் தனியார் பங்களிப்புடன்

# சுற்றுச்சூழலைப் பாதிக்கும் அனல்மின் திட்ட அறிவிப்புத் தேவையா?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு கேள்வி!

நெல்லை.செப்.4-.

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:-

2006 முதல் 2011 வரை கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் வட சென்னை, மேட்டூர், வல்லூர், உடன்குடி, தூத்துக்குடி உட்பட பல இடங்களில் 6000 MWக்கு மேல் அனல் மின் திட்டம் உருவாக்கப்பட்டு, பணிகள் முடிவடைந்து தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. 2011 - 2021 வரை 10 ஆண்டு காலத்தில் புதிய அனல் மின் திட்டப்பணிகள் தொடங்கப் படவில்லை என்பது உங்களுக்கு தெரியுமா CMsir?



2021-ல் தி.மு.க.ஆட்சி பொறுப்பேற்ற போது சோலார் மூலம் சுமார் 1000 MW மின் உற்பத்தி மட்டுமே செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த 5 ஆண்டுகளில் நவீன சோலார் மின் திட்டத்தின் மூலம் 15,000 MWக்கு மேல் மின் உற்பத்தி செய்யப்பட்டு தடையில்லா மின்சாரம் வழங்கி தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியவர் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பது உங்களுக்கு தெரியுமா CMsir?

தற்போது பாரத பிரதமர் வீடுகளுக்கு சோலார் மின் திட்டத்தின் மூலம் மின் உற்பத்தி செய்து பயன்படுத்துவதற்கு மானியம் கொடுத்து ஊக்குவிப்பதால், வரும் 5 ஆண்டு காலத்திற்குள் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வீடுகள் சோலார் மின் திட்ட மூலம் விரிவுபடுத்தப்பட்டு மின் தேவைகள் வெகுவாக குறைந்து மின்துறையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழ்நாடு உருவாகும் என்பது உங்களுக்கு தெரியுமா CMsir? தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய solar backup system மூலம் எளிதாக பல ஆயிரம் MW மின்சாரம் உற்பத்தி செய்து இரவு நேரங்களிலும் சோலார் மின்சாரம் பயன்படுத்த முடியும் என்ற நிலையில் தமிழக முதல்வர் 110 விதியின் கீழ் தூத்துக்குடியில் தனியார் பங்களிப்புடன் இரண்டு 800 MW திறன் கொண்ட சுற்றுச்சூழலை பாதிக்கும் அனல் மின் திட்ட அறிவிப்பு தேவையா? தமிழ்நாடு மின்வாரியத்தை தனியாருக்கு விற்பனை செய்ய இத்திட்டத்தை அறிவித்திருக்கிறீர்களா CMsir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.

---

### ரீல்ஸ் போடுவதற்காகத்தான்

# கச்சத்தீவுப் பிரச்சினையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்!

## சட்டப்பேரவையில் முனைவர் கோவி.செழியன் பேச்சு!

சென்னை, செப். 4-

சட்டப்பேரவையில் முனைவர் கோவி.செழியன் பேசுகையில், ஆளுங்கட்சியினர் ஒரு ரீல்ஸ் போடுவதற்காகத்தான் கச்சத்தீவுப் பிரச்சினையை பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் கச்சத்தீவு பிரச்சினை குறித்து அமைச்சர் நிர்மல் குமார் பேசியதற்கு முனைவர் கோவி.செழியன் அளித்த பதில் வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உறுப்பினர் படகுப் பிரச்சினையைப் பற்றித்தான் பேசி



னார். மாறாக நீர்ப்பாசனத் துறை அமைச்சர் எழுந்து கச்சத்தீவு என்று ஒப்பன் செய்தார். அவர் ஒப்பன் செய்துவிட்டு சிரித்துக் கொண்டிருந்த காட்சியும் தெரியும். மாறாக சட்டத் துறை அமைச்சர் எழுந்து நீண்ட நெடிய நேரம் பேசி இருக்கிறார்.

ஒரு உண்மை புரிகிறது. விவாதம் முறையாக சரியாக போய் கொண்டிருப்பதை திசை திருப்ப வேண்டுமேயானால் ஒரு தலைப்புச் செய்தி சொல்ல வேண்டும், அதையொட்டி சட்ட அமைச்சர் கருத்து சொல்ல வேண்டும், நாங்கள் எழுந்து நின்று அதற்கு எதிர்வினையாற்ற வேண்டும்.

அது புகைப்படம் எடுக்கப்பட்டு, அது வெளியிலே அவர்கள் அமைதியாக பேசுவதைப் போலவும் தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து கொந்தளிப்பது போலவும் ஒரு ரீல்ஸ் போடுவதற்காகத் தான் கச்சத்தீவுப் பிரச்சினையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களே தவிர அது காட்சிப்படுத்த அல்ல.

எனவே எங்கள் பகுதியை காட்டுகின்ற அதே நேரத்தில் ஆளுங்கட்சியினுடைய இருப்பையும் காட்டினால்தான், அவர்கள் செய்கிற செயல் வெளியே தெரியும். எனவே ஒருதலைப்பட்சமாக ஒளிபரப்புவதை சபாநாயகர் தலையிட்டு கூர்ந்து கவனித்து இரு பக்கமும் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முனைவர் கோவி.செழியன் பேசினார்.

